# தொல்காப்பியம் உணர்த்தும் போர் மரபுகள்

**கு.மகாராஜன்**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
கணேசர் கலை அறிவியல் கல்லூரி
மேலைச்சிவபுரி

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

தொல்காப்பியம் பழந்தமிழரின் இலக்கணநூலாகத் திகழ்கிறது, என்று இறையனார் களவியல் என்னும் அகவிலக்கண நூல் கூறுகிறது. தமிழ் மக்கள் வாழ்க்கையில் ஒழுக்கம் பற்றிய சிறப்பினை அகம், புறம் என வகுத்துக்கொண்டனர். **“அகவொழுக்கம் தொடர்புடைய மக்கள், உற்றார் உறவினரோடு ஏற்படுவது அகவொழுக்கம்”** எனப்படுகிறது. **“அரசன், பொதுமக்கள், போர்வீரர் என்பவரோடு ஏற்படுவது புறவொழுக்கம்”** எனப்படுகிறது. திணை என்பது ஒழுக்கம் என்பதால் தொல்காப்பியர் அகத்திணை, புறத்திணையென பாகுப்படுத்தினார். மேலும் அவற்றுள் **அகமாக குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை எனவும், புறமாக வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்,** என எழுதிணைகளாகவும் அகத்திற்கு புறமாகப் படைத்துள்ளார் தொல்காப்பியர்.

## புறத்திணையியல்

புறம் என்ற சொல் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் பலவிடங்களின் பயின்றுள்ளது. அகராதி குறிக்குமாறு இச்சொல் வெளியிடம் அந்நியம், பக்கம், முதுகு, அலர்மொழி, காலம் ஆகிய வெவ்வேறு பொருளைக் குறிக்கும் வகையில் இடம் பெற்றுள்ளது. புறப்பொருள், புறத்திணையென வழங்கும் இடங்களில், அகப்பொருள் அகத்திணை என்பவற்றிற்கு மறுதலை ஆகியறவற்றைக் குறிக்கப் ‘‘புறம்’’ என்றும் இச்சொல் பயன்படுகின்றது. அவலம், இரக்கம், வெகுளி, வீரம், பெருமிதம் ஆகிய உணர்வுகள், காமம் பற்றாது நிகழுங்கால் புறத்திற்குரியன. காமம் போலன்றி வாழ்வின் பல நிலைகளின் இத்தகு உணர்ச்சிகளுக்கு இடமுண்டு, எனினும் புறத்தினும் அகமே முதன்மையானதாகவும், இன்றியமையாததாகவும், புலவர்களால் பேசப்பட்டிருக்கிறது. இதற்குரிய காரணம் ஈண்டு ஆராய்வதற்குரியது.

‘புறம்’ என்னும் குறியீடு பல்வேறு உணர்வுகளுக்குரியதாயிருப்பினும், மறவுணர்வாகிய வீரத்தையே பெரிதும் குறிப்பதாக அமைந்திருக்கிறது. புறத்திற்குரிய ஏனைய உணர்வுகளிலும் வீரமே விழுமிய உணர்வாகப் போற்றப்பட்டிருக்கிறது. ஆண்மகனின் பெருந்தகுதியாக மறவுணர்வு கருதப்பட்டிருப்பதை மைந்தன், ஆடவன், ஆடூஉ, ஆகிய பெயர்களும், காளை, விடலை ஆகிய உவம ஆகுபெயர்களும் காட்டுகின்றன. ‘‘மைந்து” என்பதற்கு ‘‘வலிமை’’ என்பது பொருள். ஆகவே மறவுணர்வு

நாட்டிற்கும் சமூகத்திற்கும் மிகவும் தேவையானதொரு பண்பாக அக்காலத்தில் கருதப்பட்டமை அறியலாம். மனித வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்தில் ஒவ்வொரு இயல்பு சிறப்பாகப் போற்றப்படுகிறது. சங்ககாலத்தில் தமிழரின் வீரம் முதன்மையாகப் போற்றப்பட்டது. வீரமிக்க வீரனையே சிறப்புக்குரியவர்களாகக் கருதப்பட்டனர். இக்கருத்தினை புறநானூறு,

**"வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்**
**களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே". (புறம்-312).**

என்னும் புறப்பாடல் வழி அறியமுடிகிறது. இப்புறப்பாடல் குறிப்பிடும் கடமைகளும் போரோடு தொடர்புடையனவாக இருப்பதைக் காணலாம். இப்பாடலில் வரும் சான்றோனாக்குதல் என்னும் சொல்லுக்கு "வீரனாக்குதல்" என்று பொருள் கொள்வார் உ.வே.சா. சான்றோர் என்னும் சொல் பழைய காலத்தில் "வீரம்" எனும் பொருளிலேயே பயின்றிருக்கும் என்பார், வ.சுப.மாணிக்கம். சங்க இலக்கியத்தில் சான்றோன் என்பது பின்பு ஷநலன்களை உடையவன் என்று பொருளில் குறிப்பிட்டாலும் வீரன் என்ற பொருளிலும் ஆளப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் புறப்பொருள் உணர்த்துதலாற் பெற்ற பெயர் ஆகும். தொல்காப்பியர் மேலும் அகத்திணையாகிய எழுதிணையும் சாற்றி அவற்றின் புறத்து நிகழ்வன எழுதிணையென உணர்த்தினார்.

### திணைப்பாகுபாடுகள்

தொல்காப்பியப் புறத்திணையியல் கூறும் இலக்கண நெறிகள் ஈண்டு நம் ஆய்விற்குரியன. இப்புறத்திணையியல் ஏழு புறத்திணைகளைப் பேசுகின்றது. ஒவ்வொர் அகத்திணைக்கும் ஒரு புறத்திணை புறமாக அமைகிறது எனத்தொல்காப்பியர் கூறுகின்றார்.

புறத்திணைகளுக்கும் அகத்திணைகளுக்கும் இயைபு கூறும்போது உரையாசிரியர் ஒவ்வொருவரும் வெவ்வேறு காரணம் கூறக்காண்கிறோம். காதற்களவும் ஆநிரைக்களவும் நிகழும் ஒப்புமை பற்றி வெட்சி குறிஞ்சிக்குப் புறனென்கிறார் இளம்பூரணர். கருதிய பொருளை இரவின் கண் முடித்து மீளல் காரணமாக வெட்சி குறிஞ்சிக்குப் புறமாயிற்று என்று கூறுகிறார் நச்சர். குறிஞ்சியும், வெட்சியும் ஒருங்கே களவில் நிகழ்வதால் வெட்சி, குறிஞ்சிக்குப் புறமாகும் என்பார் சோமசுந்தர பாரதியார். நிழலும் நீரும் உள்ள கால நிலையில் வஞ்சி முல்லைக்குப் புறனாயிற்று எனக் கூறுவர் இளம்பூரணர். அரசன், அரசி பிரிவு ஒவ்வாமையால் வஞ்சி முல்லைக்குப் புறனாகும் என்பார் நச்சர்.

மகளிர் மனையறம் பேணுதல் போல ஆடவர் ஆண்மையறம் பேணுதல் பற்றி வஞ்சி முல்லைக்குப் புறனாயிற்று, எனக்கூறுவர் சோமசுந்தர பாரதியார். இவ்வாறு உரையாசிரியர்கள் வேறு வேறு காரணம் கூறுதற்கிடமாக அக, புறத்திணைகளின் இயைபுகள் தொல்காப்பியரால் விளக்கப்படவில்லை. அகத்திணைக்கே சிறப்பாகப் பொருந்தும், முதல், கரு, உரிப்பொருள்கள் புறத்திணைக்கு முற்றிலும் தொடர்பற்றன எனக்கூறுதற்கில்லை. இம்மூன்று பொருள்களின் அடிப்படையிலேயே திணை இயைபு எண்ணப்பட்டதாகத் கருத இடமுள்ளது. உரையாசிரியர் நச்சர், தும்பைத்திணை நெய்தல் திணைக்குப் புறனாக அமைவது பற்றி விளக்குகையில், முதல், கரு, உரி ஆகிய மூன்றாலும் தும்பையும் நெய்தலும் இயைபு பெறுதலைக் காட்டுகின்றார். முதலும் கருவும் பெறாத்திணைகளாகிய கைக்கிளையும், பெருந்திணையும் உரிப்பொருள் பற்றி முறையே காஞ்சித்திணையோடும், பெருந்திணையோடும் இயைபு பெறுகின்றன. எனினும் முதல், கரு, உரிப்பொருள்களின் அடிப்படையில் புறத்திணைகளைச் சிந்தித்தல் பயனில் முயற்சி என்பார் டாக்டர்.ப.அருணாசலம்.

நில இயல்பும், கருப்பொருள் வளத்தால் அமையும் வாழ்க்கைப் போக்குகளும், மன உணர்வுகளும், போருக்குரிய காரணங்களாக மலருகின்றன என்பதை எண்ணுங்கால், புறத்திணைகளுக்கும் முதல், கரு, உரிபொருள்களுக்கும் உள்ள இயைபு புலனாகும். காதலரும் கள்வரும் மறைந்து ஒழுகுதற்குரிய மலைச் சூழல், இருவகைக் களவிற்கும் ஏற்ற வகையில் மக்கள் ஒழுங்கிறைகின்ற கூதிர், முன்பனிக்கால நிலைகள், யாமப் பொழுது, கொண்ட செல்வாரின் விரைந்த உள்ள உடலியக்கங்கள், பொருளுக்குரியாரின் சீற்றம், மீட்பு முயற்சி, ஆகிய ஒவ்வொரு நிலையிலும் வெட்சியும், குறிஞ்சியும் இயைந்துவரக் காணலாம். எனினும் அகத்திணைக்குப் போலப் புறத்திணைக்குப் புலனெறி வழக்கம் இன்மையின், புறப்பாடல்களில், முதல்,கரு, உரி வருணனைகளும் உள்ளுறையும், இறைச்சியும்,

பெயர் மறைத்துப்பாடுதலும் இல்லாது போயின, அதனால் திணையியைபு விளங்காது போயிற்று என உணரலாம்.

**வெட்சியும் கரந்தையும்**

மலையாகிய குறிஞ்சித்திணைப் புறம் நிரைகோடலும், நிரைமீட்டலும் என்னும் வேறுபாடு குறித்து வெட்சி எனவும் கரந்தை எனவும் இரண்டு குறி பெறுவதாக குறிக்கிறது தொல்காப்பியம்.

**வஞ்சி**

காடுறை உலகாகிய முல்லைப் புறம் மண்ணாசை வேட்கையான் எடுத்துச் செலவு புரிதலான், அவ்விரு பெருவேந்தரும் ஒரு வினையாகிய செலவு புரிதலின் அது வஞ்சியென ஒரு குறி பெருதலாக இளம்பூரணனார் குறிப்பிடுகிறார்.

**உழிஞையும் நொச்சியும்**

புனலுலகாகிய மருதத்துப்புறம் எயில் அழித்தலும், எயில் காத்தலும் என்னும் வேறுபாடு குறித்து உழிஞை எனவும் நொச்சி எனவும் இரண்டு குறி பெறுதலும் என்கிறார் தொல்காப்பியர்.

**தும்பை**

மணலுலகாகிய நெய்தற்புறம் இரு பெரு வேந்தரும் பொருதலாகிய ஒரு தொழிலே புரிதலால், அது தும்பை என ஒரு குறி பெறுதலாக தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

**வாகை**

நடுவுநிலைத் திணையாகிய பாலைப்புறம் வேந்தரேயாயினும் ஏனையோராயினும் தனது மிகுதியாகிய வெற்றியைக் குறிப்பிடுவதால் அது வாகை என ஒரு குறி பெறுதலாக இளம்பூரணனார் குறிப்பிடுகிறார்.

**காஞ்சி**

பெருந்திணைப்புறம் நிலையாமையாகிய நோம்திறப் பொருளே குறித்து வருதலின் காஞ்சி என ஒரு குறி பெறுவதாக குறிப்பிடுகிறார்.

**பாடாண்**

கைக்கிளைப்புறம் செந்திறமாகிய ஒரு பொருளே குறித்து வருதலின் பாடாண் என ஒரு குறி பெறுதலும், உணர்த்தியவாறு ''புறத்திணை'' பாகுபாட்டை இளம்பூரணனார் குறிப்பிடுகிறார்.

**புறப்பொருள் வெண்பாமாலை**

புறப்பொருள் என்பது உலக நெறியாக விளங்குவாதாகும். ஒரு தனி மனிதனை உலக வாழ்வோடு இணைத்து கொள்வதாக அமைவதாகும். இவை தனிமனிதனின் **கல்வி, ஒழுக்கம், புகழ், வீரம், ஈகை** போன்றவற்றைப் பிறருக்குப் தெளிவுபடுத்தும் விதமாக அமைவதாகும்.

புறப்பொருள் இலக்கணத்தைச் சிறப்பித்துக் கூறும் இலக்கண நூல்கள் பல உண்டு. அவற்றுள் தொல்காப்பியம், பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய மூன்றும் குறிப்பிடத்தக்கனவாகும்.

புறப்பொருள் பற்றி சங்ககாலம் தொட்டே பேசப்பட்டு வருகின்றன. புறப்பொருள் வெண்பாமாலை, பன்னிரண்டு திணைகளாகப் பகுத்து விரிவுபடப் பேசுகிறது. இப்புறப்பொருள் "பன்னிருபடலம்" என்னும் நூலை அடியொற்றி எழுதப்பட்டது என குறிப்பிடுகிறது. இதனை,

**"பன்னிரு புலவரும் பாங்குறிப் பகர்ந்த**
**பன்னிரு படலமும் பழிப்பின்று உணர்ந்தோன்**
**ஒங்கிய சிறப்பின் உலகமுழுது ஆண்ட**
**ஐயனாரிதன் அகலிடத் தவர்க்கு**
**மையறு புறப்பொருள்..."** **(புறப்பொருள். சிறப்பாயிரம்)**

எனும் நூற்பா சான்றாக சுட்டுகிறது.

தமிழ்மொழியின் இலக்கணத்தைக் குற்றமின்றிக் கற்றுணர்ந்தவர் பலர். அவர்களுள் பிறரால் அடைவதற்கு அருமைப்பாடு வாய்ந்ததாகிய பெரிய புகழை உடையோர் தொல்காப்பியன் முதலாகிய பன்னிருவர் என்றும் அந்நூல் முழுவதையும் குற்றமின்றிக் கற்றவர் **"ஐயன் ஆரிதன்"** என்று இப்பாடலைச் சான்றாக ச. திருஞான சம்பந்தம் குறிப்பிடுகிறார்.

புறத்திணைகள் பன்னிரண்டு என புறப்பொருள் மொழிகிறது. மேலும் புறம், புறப்புறம், அகப்புறம் என மூன்றாகப் பாகுபடுத்தியுள்ளார். இதனை,

**“வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி**
**உட்குடை உழிஞை நொச்சி தும்பை என்று**
**இத்திறம் ஏழும் புறம் என மொழிப.**

என்றும்,

**“வாகை பாடாண் பொதுவியல் திணைஎனப்**
**போகிய மூன்றும் புறப்புறம் ஆகும்’’.**

என்றும்,

**“கைக்கிளை பெருந்திணை ஆம்இவ்விரண்டும்**
**அகப்புறம் ஆம் என அறைந்தனர் புலவர்’’.**

என்னும் நூற்ப்பாக்களால் அறியலாம்.

‘‘பண்டைக்காலப் போர் முறைகள் **ஆ, மண், கோட்டை, வலிமை என்னும் நான்கினை** அடிப்படையாகக் கொண்டது’’ என ச.திருஞானசம்பந்தம் குறிப்பிடுகிறார்.

**போர் முறைகள்**

| | | |
|---|---|---|
| வெட்சி | - | ஆக்களைக் கவர்தலுக்கான போர் |
| கரந்தை | - | ஆக்களைக் மீட்டலுக்கான போர் |
| வஞ்சி | - | மாற்றார் மண்ணைக் கவரச்செய்யும் போர் |
| காஞ்சி | - | தடுப்பதற்கான போர் |
| நொச்சி | - | பிறரிடமிருந்து கோட்டையைக் காப்பதற்கான போர் |
| உழிஞை | - | அக்கோட்டையைக் கவர முற்றுகை இடுவதற்கான போர் |
| தும்பை | - | நேருக்கு நேர் நின்று வலிமையைக் காட்டும் போர் |
| வாகை | - | இவ்விருவருள் ஒருவர் பெறும் வெற்றியே ஆகும். |
| பாடாண் | - | பாடப்படுகின்ற ஆண்மகனின் ஒழுகலாறு. |

இவற்றுள் புறப்பொருள் வெண்பாமாலை கரந்தை, நொச்சி, பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஆகிய ஐந்தைக் கூடுதலாகப் புறத்திணைகளாப் பன்னிரெண்டாகக் காட்டுகிறது.

**புறத்திணையியல்**

வெட்சித்திணை குறிஞ்சிக்குப் புறனெனலும் அது பதினான்கு துறைகளை உடையனவாகும்.

**“அகத்திணை மருங்கின் னரிறப வுணர்ந்தோர்**
**புறத்திணை யிலக்கணந் திறப்படக் கிளப்பின்**
**வெட்சிதானே குறிஞ்சியது புறனே**
**யுட்குவரத் தோன்று மீரேழ் துறைத்தே’’.**

முற்கூறிய அகத்திணை ஏழற்கும் புறமாகிய புறத்திணை இலக்கணம் உணர்த்தியமையால் அது ‘‘புறத்திணையியல்’’ என்னும் பெயர்பெற்றது ஆகும். முற்கூறிய குறிஞ்சித்திணைக்குப் புறன் வெட்சித்திணை என்பதும் ஆகும். இவற்றுள் “உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே” என்பது அது தான் அஞ்சுதகத் தோன்றும் பதினான்கு துறையினை உடைத்து என்றவாறு நச்சர் குறிப்பிடுகிறார்.

**வெட்சித்திணை**

வெட்சி என்பது பூவால் பெற்ற திணைப்பெயராகும். புறத்திணைகளுள் முதலாவது திணை வெட்சித்திணையே ஆகும். அகத்திணையில் களவு என்பது முதலாவதாக வைத்து கூறப்பட்டுள்ளது, இதை போலவே வெட்சி மறவர்கள் வெட்சி பூவினை சூடிக்கொண்டு ஆநிரைகளை கவர்ந்து செல்வது மரபாகும். இதனை தொல்காப்பியர்,

**“ வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்**
**ஆதந் தோம்பல் மேவற்றாகும்’’. (தொல்.புறத்.நூ-2).**

இது வெட்சித்திணையின் பொது இலக்கணமாக உணர்த்தியது ஆகும்.

**“வேந்தனால் விடப்பட்ட முனை ஊரகத்துள்ளார் வேற்று நாட்டின்கண் களவினானே ஆவைக்கொண்டு பெயர்ந்து பாதுகாக்கும் மேவலை உடைத்து”** என்கிறார் இளம்பூரணனார். மேலும் ஓம்புதலாவது மீளாமல் காத்தல், புறப்பொருட்பாகுபாடாகிய பொருளினும் அறத்தினும் பொருள் தேடுதற்குறிய “நால்வகை வருணத்தாரினம் சிறப்புடையோர் அரசராதலானும் மாற்றரசர்பால் திறை கொண்ட பொருள் மிகவும் சிறந்ததாகலானும் அப்பொருள் எய்துங்கால் அவரைப் போரில் வென்று கோடல் வேண்டுதலானும், போருக்கு முந்துற நிரை கோடல் சிறந்ததாகலானும் இப்பொருள் முன் கூறப்பட்டது” என்கிறார் இளம்பூரணனார்.

வெட்சி குறிஞ்சிக்குப் புறனானது பற்றி நிரைகோடல் குறிஞ்சிக்குரிய மலை சார்ந்த நிலத்தின்கண் நிகழ்தலானும் அந்நிலத்தின் மக்களாயின் பிற நாட்டு ஆநிரையைக் களவிற் கோடல் ஒரு புடைகுறிஞ்சிக்கு உரித்தாகிய களவோடு ஒத்தலானும் அதற்கு அது புறனாக குறிப்பிடுகிறார் புலவர்.

ஓர் அரசன் “நாடோறும் நாடி” முறை செய்தான், அவ்வாறு செய்யாதிருந்தால் அவன் ஆண்டு தோறும் அவன்நாடு கெடும் என்பதை அவன் நன்கு அறிந்திருந்தான். ஆகவே அவனுடைய நாடு செல்வச் செழிப்புடன் விளங்க பிற நாட்டு வேந்தர்களின் மீது படையெடுத்துச் செல்வது நல்ல அரசனின் போர் மரபாக விளங்கியது.

நாட்டுமக்களைத் துன்புறுத்தாது மகிழ்சியுடன் வாழச் செய்து செங்கோல் செலுத்தி வளப்பம் பொங்க ஆட்சி புரிந்து வந்த போது, அடுத்த நாட்டு அரசன் பொறாமை கொண்டு தன்னை அழிக்கக் கருதியதை உறுதியாக அறிந்தால் மக்களைக் காக்கும்தன் கடமையை கருதியும் அடுத்த நாட்டு வேந்தன் மேல் படையெடுத்துச் செல்ல விரும்பினான். இதனை “ஓர் அரசன் அடுத்த அரசன் மேல் போர் தொடுப்பது என்பது திடீரென்று நடந்தால் அது போர்” என்கிறார் நா.இராமையாபிள்ளை.

புறநானூற்றில் அமைந்த வெட்சித் திணைக்குரிய நான்கு பாடல்களிலும், பெரும் போர்ச் செய்திகளோ, வேந்தர் பற்றிய குறிப்பே படைகளின் பெருக்கமோ பேசப்பெறவில்லை. அவற்றுக்கு மாறாகப் பெயர் அறியப்படாத வீரர்களைச் செவியிறந்து தாழ்தரும் கவுளன், புல்லணற்காளை, வில்லோன் என்ற பொதுப்பெயர்களால் குறிக்கக் காணலாம்.

1) பண்டைய தமிழர்களின் செல்வமாக விளங்கிய ஆநிரைகளைக் கவரும் களவு முயற்சியே பிற்காலப்பெரும் போர்களுக்குத் தொடக்கச்செயலாக அமைந்ததனை இதனால் அறியலாம்.
2) நிரை மீட்கும் கரந்தைச் செயலாக அமைந்ததனை இதனால் அறியலாம். நிரை மீட்கும் கரந்தைத் செயல்களைக் கூறும் புறநானூற்றுப் பாடல்களில் வேந்தரைப் பற்றிய குறிப்பும், பெரும்படை குறித்த செய்தியும் காணப்படுகின்றன.
3) வெட்சி, கரந்தைப் போர்களில்பட்ட வீரர்களுக்குக் கல்நடுதலும், வாழ்த்துதலும் பற்றித் தொல்காப்பியர் கூறுகிறார்.
4) வெட்சி, கரந்தை பற்றிக் கூறுமிடத்தில் மட்டுமே தொல்காப்பியர் நடுகற் செய்திகளைக் கூறுவது கொண்டு, தொடக்க காலத்தில் ஆநிரைப் போர்களில் ஈடுபட்டோர்க்கே நடுகல் நடப்படும் வழக்கம் இருந்ததென்பர்.

**துணைநூற்பட்டியல்**

1. அப்பாத்துரை.கா — தென்னாட்டுபோர்களங்கள், மெய்யப்பன் தமிழாய்வகம், 53, புதுத்தெரு, சிதம்பரம் - 608001.
2. இராமையா பிள்ளை. நா. — தொல்காப்பியர் புறத்திணை விளக்கம், கோட்டூர்புறம், சென்னை-85.
3. இராமலிங்கம். இரா. — சங்க இலக்கியத்தில் வேந்தர், மணி பிரிண்டர்ஸ், மதுரை - 600 010.